# செங்கோட்டை நகர்மன்றம்

## செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 19.05.2023 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்

**மன்றப் பொருள் 01 :**

செங்கோட்டை நகராட்சியின் 2022–2023ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்:213 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 02 :**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூருக்கு 2022–2023ம் ஆண்டுக்கான வருடாந்திர பங்குத்தொகை ரூ.30,000/ செலுத்திட கடிதம் வரப்பெற்றுள்ளது தொகையினை வருவாய் மூலதன நிதியில் இருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு ; 1. மேற்படி தொகையினை செலுத்திட மன்றம் அனுமதிவழங்கலாம்.

2. செலவினத்தொகை ரூ.30,000/– வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.316/2013/சி1)

**தீர்மானம் எண்:214 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சியில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றிய பணியாளருக்கு வெகுமதி அளித்திடும் வகையில் இந்நகராட்சியின் ஒட்டுநர் திரு.கோவிந்தராஜ் என்பவருக்கு தங்கபதக்கம் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18313/2022/J2 நாள்.09.03.2023ல் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி ஒட்டுநருக்கு தங்கபதக்கம் வழங்க மேலாளர், Tamil nadu Handicrafts corporation, Ltd நிறுவனத்தினிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது மேற்படி தங்கப்பதக்கத்திற்கான செலவினம் ரூ.35,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு ; தங்கப்பதக்கம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.35,000/– வருவாய் மற்றும் மூலதன நிதியிலிந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:215 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 04 :**

செங்கோட்டை நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட், செங்கோட்டை கிளை நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு சொத்து வரி செலுத்தக் கோரிய கேட்பு அறிவிப்பினை ஆட்சேபணை செய்து தொடரப்பட்ட WP(MD) No 3554 to 3561 of 2011 வழக்கானது இந்நகராட்சிக்கு சாதகமாக 29–07–2022ம் தேதி தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது. தற்பொழுது மீண்டும்

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மேல்முறையீட்டு வழக்கு WA(MD) No 174/2023 to 180/2023 தாக்கல் செய்துள்ளார், எனவே மேல்முறையீட்டு வழக்கினை இந்நகராட்சி சார்பில் எதிர்வாதுரை தயார் செய்து தாக்கல் செய்திடவும, இந்நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாணை பெற்றுத் தர இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞரை நியமனம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்;1230/2011/அ1

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்:216 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

<u>மன்றப் பொருள் 05 :</u>

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் முத்துச்சாமி பூங்கா, நகராட்சி வளாகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமம் மற்றும் பம்பு ஹவுஸ் தலைமை நீரேற்று நிலையப் பகுதி, சாம்பவர் வடகரை ரோடு பகுதி, கே.சி ரோடு நீர்த்தேக்க நிலைய வளாகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமம் குத்தகை இனங்கள் இரண்டு குத்தகை இனங்களாக குத்தகை முறையில் அனுபவித்துக் கொள்ள வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்காணும் குத்தகை இனம் பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய சந்தை கட்டுமானம் பணி நடைபெறுவதால் பல புளி மரங்கள் உட்பட பலன் தரும் மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன. மேலும் இரண்டு குத்தகை இனங்களிலும் உள்ள பலன் தரும் மரங்கள் பல இயற்கை இடர்பாடுகளால் விழுந்து விட்டதாலும், குத்தகை அடிப்படையில் அனுபவித்துக் கொள்ள எவரும் முன்வராத காரணத்தினால், இரண்டு குத்தகை இனத்தினையும் ஒன்றாக சேர்த்து ஒரே குத்தகை இனமாக ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள பொது ஏல அறிவிப்பு கடிதம் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; 1. இரண்டு குத்தகை இனத்தினையும் ஒன்றாக சேர்த்து ஒரே குத்தகை இனமாக மாற்றம் செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள பொது ஏல அறிவிப்பு வெளியிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்:217 : மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி